**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.1250/2021 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26–ம் தேதி 3ம் பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 3ம் பிரதிவாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : பெரியசாமி | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் 1ம் சாட்சியாவேன். மேலும் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 13.06.1965 ராமண கவுண்டர் பெயரிலுள்ள கிரய பத்திரம் ஆவணம் எண்.1429/1965 சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 10.09.1970 தேதியிலுள்ள பெரியசாமிகவுண்டர் மற்றும் முத்துசாமிகவுண்டர் பெயரிலுள்ள கிரய பத்திர ஆவண எண்.2862/1970 இணையதள நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 11.07.1983 தேதியிலுள்ள பெரியசாமிகவுண்டர் மற்றும் முத்துசாமிகவுண்டர் பெயரிலுள்ள பாகப்பிரிவினை பத்திரம் ஆவண எண்.2563/1983 இணையதள நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய முதல்விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.